

க.பல்லாவரம், புனித தெரசா மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு பள்ளி மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மண்டல குழுத் தலைவர் இ.ஜோசப் அண்ணா துரை, கண்டோன்மெண்ட் நகரச் செயலாளர் டி.பாபு மற்றும் ஆசிரியர்கள் உள்ளனர்.





திருவள்ளூர் மேற்கு மாவட்டம் முன்னாள் விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செஞ்சி டி.ராஜ், செஞ்சி ஊராட்சி மன்ற தலைவர் அறிவழகி ராஜ் ஆகியோர் இல்லத் திருமண விழா மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆர்.காந்தி, முன்னாள் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள் இதில் மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிடபக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன், குருதாஸ், உதயமலர் பாண்டியன், ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், சரஸ்வதி சந்திரசேகரன், சி.சு.ரவிச்சந்திரன், கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், ஆர்.ஜெயசீலன், ஜான்(எ)பொன்னுசாமி, டி.தேசிங்கு, வேணுகோபால், வழக்கறிஞர் மூர்த்தி, புரட்சி தாஸ், பி.கே.நாகராஜ் உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

ஒருங்கிணைந்த இந்திய வர்த்தக மற்றும் தொழில் சபை சார்பில்

# தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி மாநாடு!

## அமைச்சா தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.19-

சென்னையில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைந்த இந்திய வர்த்தக மற்றும் தொழில் சபையான அசோசெம் சார்பில் நடத்தப்படும் MSME தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி மாநாட்டை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார்.

பின்னர் அவர் பேசியதாவது :-

தமிழ்நாட்டில் உள்ள MSME தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்கு புதிய கொள்கைகளை உருவாக்க ஆலோசனைகள் வழங்கவும் தொழிலுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் கருத்துக்களை எடுத்துரைக்கவும், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கில் நடத்தப்படும் MSME வளர்ச்சி மாநாட்டை தொடங்கி வைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாநாட்டினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்துள்ள அசோசெம் தமிழ்நாடு மாநிலத் தலைவர் மற்றும் நிர்வாகிகளுக்கு என் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தங்களின் பங்களிப்பை அளிப்பதற்காக 1920 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இந்த கூட்டமைப்பானது இன்று 400 சங்கங்கள் 4 லட்சத்து 50 ஆயிரம் உறுப்பினர்களுடன் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. மிக பெருத்தமான காலக்கட்டத்தில் இந்த மாநாடு நடைபெறுகிறது. சமீபத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமெரிக்க நாட்டிற்கு சுற்று பயணம் மேற்கொண்டு 11,516 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில், 19 பெரு நிறுவனங்களுடன் 7,616 கோடி முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துள்ளார்கள்.

### தொழில் துறைக்கு உகந்த சூழ்நிலை!

தொழில் துறைக்கு உகந்த சூழ்நிலை நிலவும் காலக்கட்டத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில், நிதி முதலீடு பசுமை தொழில்நுட்பம் அடிப்படை கட்டமைப்புகள், வளர்ச்சிக்கான கொள்கைகள், வணிகம் மற்றும் சந்தைப்படுத்துதல், ஆகியவற்றை குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது. இந்த மாநாட்டில், கழக அரசால் MSME தொழில் நிறுவனங்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களை எடுத்துரைக்க நல்ல ஒரு வாய்ப்பை வழங்கிய அசோசெம் தலைவருக்கும், சங்க நிர்வாகிகளுக்கும், எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களே நாட்டின் பொருளாதாரத்திற்கும் தொழில் வளர்ச்சிக்கும் அடித்தளமாக உள்ளது. MSME தொழில் நிறுவனங்கள் இந்திய ஏற்றுமதியில் 42 சதவீத பங்களிப்பையும் மொத்த உள்நாட்டு உற்பத்தில் 30 சதவீத பங்களிப்பையும வழங்குகின்றன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான உள்நாட்டு உற்பத்தி, வேலைவாய்ப்பு, ஏற்றுமதி, கிராமப்புர பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றில் MSME நிறுவனங்களின் பங்கு மிக முக்கியமானது. முதலமைச்சர் அவர்களின் ஓயாத உழைப்பாலும், சீரிய திட்டங்களாலும், சிறந்த நிர்வாகத்தாலும், தொழில் துறையில் இந்திய அளவில் தமிழ்நாடு உள்நாட்டு உற்பத்தியில் 9.07 சதவீதம் பங்களித்து 2 ஆம் இடத்திலும், ஏற்றுமதியில் 9.5 சதவீதம் பங்களித்து 3 ஆம் இடத்திலும் உள்ளது. தமிழ்நாட்டில் 26 லட்சத்து 61 ஆயிரம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு சுமார் 2 கோடிக்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி இந்திய அளவில் 2 ஆம் இடத்தில் உள்ளது. இந்த சாதனைகளுக்கு எல்லாம் அடித்தளமாக விளங்குவது "திராவிட மாடல் ஆட்சி" என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குறு, சிறு, மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில் சமத்துவம், சமூக நீதி, சமச்சீர் வளர்ச்சி ஆகியவற்றை குறிக்கோளாகக் கொண்டு ஆட்சி பொறுப்பேற்ற 3 1/2 ஆண்டுகளில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், தமிழ்நாடு கடன் உத்தரவாத திட்டம், தமிழ்நாடு வர்த்தக வரவு தள்ளுபடி தளம், குறுங் குழும மேம்பாட்டு திட்டம், பெருங்குழும மேம்பாட்டு திட்டம், அடுக்குமாடி தொழில் வளாகம், தொழிலாளர் தங்கும் விடுதி, தமிழ்நாடு SCST புத்தொழில் ஆதார நிதி, தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு கழகம் என பல்வேறு புதிய திட்டங்களை செயல்படுத்தி இந்த துறையை மிகப் பெரிய வளர்ச்சி பாதைக்கு கொண்டு சென்றுள்ளார் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் உள்ள தொழில்முனைவோர்களுக்காக Micro Cluster மற்றும் Mega Cluster திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் சிறப்பாக நடைபெறும் தொழில்களுக்கு, உட்கட்டமைப்பு வசதி அமைக்கவும், விலை மதிப்பு மிக்க தொழில்நுட்ப கருவிகள், இயந்திரங்கள் வாங்கவும், ஒன்றிய, மாநில அரசுகளின் மானியங்களுடன் குழுமங்கள் பொது வசதி மையங்கள் பொது உற்பத்தி மையங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் MSME தொழில் நிறுவனங்களின் உற்பத்தி தரத்தினை உலக அளவில் உயர்த்திடும் வகையில் காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கத்தில் ரூ. 47 கோடியே 62 லட்சம் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் துல்லிய உற்பத்தி பெருங்குழுமத்தில் தொழில்நுட்ப கருவிகளை உலகத் தரத்தில் பரிசோதிக்கும் உயர்தொழில்நுட்ப பரிசோதனை கூடம், மாண்புமிகு முதல்வர் அவர்களால் விரைவில் துவக்கி வைக்கப்பட உள்ளது. விழுப்புரம் மாவட்டம் - திண்டிவனத்தில் ரூ. 155 கோடி திட்ட மதிப்பீட்டில், மருந்தியல் பெருங்குழுமத்திற்கான பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு வர உள்ளது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழக அரசு பொறுப்பேற்று இதுவரை ரூ. 203 கோடியே 95 லட்சம் திட்ட மதிப்பீட்டில் ரூ 161 கோடியே 38 லட்சம் மானியத்துடன் 43 குறுந்தொழில் குழுமங்கள் MicroCluster அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில், கடலூர் மாவட்டம் முந்திரி குழுமம், கோவை மாவட்டம் - அலுமினியம் அச்சு வார்ப்பு குழுமம்,மதுரை மாவட்டம் - வெப் ஆப் செட் பிரின்டிங் குழுமம், செங்கல்பட்டு மாவட்டம் - நவீன புகைப்படக் குழுமம் துவங்கப்பட்டுள்ள நிலையில், 39 குழுமங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு சிட்கோ நிறுவனம் குறு, சிறு குழுமங்களுக்காக ஒன்றிய அரசால் ஒப்புதல் பெறப்பட்ட 49 பொது வசதி மையங்களில் 32 பொது வசதி மையங்கள் தற்போது ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அசோசெம் போன்ற கூட்டமைப்புகள் அரசால் முன்னெடுக்கப்படும் Micro - Mega Cluster களுக்கு தங்களது ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

### புதிய தொழிற் பேட்டைகள்!

MSME தொழில் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு முழுவதும் 8,598 ஏக்கர் பரப்பளவில் 15 ஆயிரத்து 171 தொழிற்மனைகள் 130 தொழிற்பேட்டைகளை அமைக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ. 295 கோடி மதிப்பீட்டில் 512 ஏக்கர் பரப்பளவில் 8 புதிய தொழிற்பேட்டைகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. 7 மாவட்டங்களில் 248.01 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.115.53 கோடி மதிப்பில் 8 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 8 மாவட்டங்களில் 283.40 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.115.64 கோடி மதிப்பில் 10 புதிய தொழிற்பேட்டைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. குறுந்தொழில்கள் தொடங்கிட நகர்புரங்களில் போதிய இடவசதி இல்லாததால், அவர்கள் உடனடியாக தொழில் தொடங்கிட அடுக்குமாடி தொழில் வளாகம் கட்டும் திட்டத்தின் கீழ் கிண்டி மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில், ரூ.158 கோடியே 62 லட்சம் மதிப்பீட்டில் 264 தொழில் கூடங்கள் கொண்ட புதிய அடுக்கு மாடி தொழில் வளாகங்கள் கடந்த பிப்ரவரி மாதம் திறந்து வைக்கப்பட்டது. கிருஷ்ணகிரி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் 5 இடங்களில், ரூ. 208 கோடியே 51 லட்சம் மதிப்பீட்டில் அடுக்குமாடி தொழில் கூடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

MSME தொழில் நிறுவனங்களில் வெளியூரில் இருந்து வந்து பணிபுரியும் தொழிலாளர்கள் குறைந்த வாடகையில் தங்குவதற்காக, சென்னை - அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ. 29 கோடியே 47 லட்சம் மதிப்பில் 800 தொழிலாளர்கள் தங்கும் வகையில் கட்டப்பட்ட தொழிலாளர் தங்கும் விடுதி கடந்த பிப்ரவரி மாதம் திறந்து வைக்கப்பட்டது. கோயம்புத்தூர் - குறிச்சி தொழிற்பேட்டையில் ரூ. 22 கோடி மதிப்பீடில் கட்டப்பட்டு வரும் தொழிலாளர்கள் தங்கும் விடுதி ஓரிரு மாதங்களில் பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் திறந்து வைக்கப்படும்.

### தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம்!

இந்தியாவிலேயே முதல் முறையாக முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட "தமிழ்நாடு கடன் உத்திரவாத திட்டத்தின் கீழ் இதுவரை 38 ஆயிரத்து 270 தொழில் முனைவோர்களின், ரூ. 5 ஆயிரத்து 715 கோடி வங்கி கடனுக்கு, மாநில அரசின் கடன் உத்தரவாதமாக ரூ. 563 கோடியே 12 லட்சம் அரசு வழங்கியுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரு நிறுவனங்களுக்கு குறு, சிறு நிறுவனங்கள் செய்து கொடுக்கும் பொருட்களுக்கான விலைபட்டியல்களை வங்கிகளில் வைத்து விரைவாக கடன் பெற செயல்படுத்தப்படும் தமிழ்நாடு வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடி தளம் Tamil NaduTReDS திட்டத்தின் கீழ், 1,491 MSME நிறுவனங்களுக்கு ரூ. 2 ஆயிரத்து 139 கோடி மதிப்பில் வங்கி கடன் வழங்கப்பட்டுள்ளது. MSME நிறுவனங்கள், வழங்கிய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தொகையை பெருநிறுவனங்கள் வழங்காத பட்சத்தில், அவற்றை சட்டப்பூர்வமாக பெற்றுத்தர சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை வேலூர், தூத்துக்குடி ஆகிய 6 மண்டலங்களில் வசதியாக்கல் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளது. கழக அரசு பொறுப்பேற்ற 3 ½ ஆண்டுகளில் இம்மன்றங்கள் மூலம் 2,008 MSME நிறுவனங்களுக்கு ரூ. 374 கோடியே 76 லட்சம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கழக அரசு பொறுப்பேற்ற 3 ஆண்டுகளில், NEEDS UYEGPPMEGP - PMFME அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் (AABCS) ஆகிய 5 திட்டங்களின் கீழ் ரூ.1,104 கோடியே 78 லட்சம் மானியத்துடன் ரூ. 2,993 கோடியே 97 லட்சம் வங்கி கடனுதவி வழங்கி 33 ஆயிரத்து 466 இளைஞர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் 3 லட்சம் நபர்களுக்கு மேல் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது

தமிழ்நாடு முதல்வர் தலைமையிலான கழக அரசு கடந்த 3 ½ ஆண்டு காலத்தில் இது போன்ற பல்வேறு திட்டங்களை MSME தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக செயல்படுத்தி வரும் நிலையில், அசோசெம் போன்ற தொழில் கூட்டமைப்பினர் அரசின் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்த தங்களின் ஒத்து ழைப்பையும் வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டு இந்த மாநாடு MSME தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பயன் உள்ளதாக அமைய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் MSME துறை அரசு செயலர் அர்ச்சனா பட்நாயக், நபார்டு தலைமை பொது மேலாளர் ஷாஜி, தேசிய MSME நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் சஞ்சு குளோரி ஸ்வரூபா, எல்.ஐ.சி. தென்னிந்திய மண்டல மேலாளர் வெங்கடரமணன், அசோசெம் தலைவர் திருமதி. சுஷ்மா பால் பெரில்லா, இணை தலைவர்கள் சக்திவேல் ராமசாமி, சுதிர் பணிகசேரி, அசோசெம் தமிழ்நாடு மாநில துணை தலைவர் கே.மாரியப்பன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சிறுகதை மன்னன்

# எஸ்.எஸ்.தென்னரசு மனைவி ஜாக்குலின் மறைவு!

## அமைச்சர்கள் தங்கம் தென்னரசு – கே.ஆர்.பெரியகருப்பன் – பி.மூர்த்தி மற்றும் கழக முன்னணியினர் அஞ்சலி!

மதுரை, செப். 19-

சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு துணைவியார் ஜாக்குலின் தென்னரசு மறைவுக்கு அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரிய கருப்பன், பி.மூர்த்தி, மொடக்குறிச்சி சுப்புலட்சுமி, தமிழச்சி தங்கபாண்டியன், வ.வேலுசாமி, பெ குழந்தைவேலு மற்றும் கழகத்தினர் நேரில் அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்தனர்.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் சிறுகதை மன்னன் என பாராட்டு பெற்ற எஸ்.எஸ். தென்னரசு துணைவியார் ஜாக்குலின் தென்னரசு இயற்கை எய்தியதை தொடர்ந்து மதுரையில் உள்ள அன்னாரின் இல்லத்திற்கு நேரில் சென்ற அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரிய கருப்பன், பி.மூர்த்தி, முன்னாள் அமைச்சர் மொடக்குறிச்சி சுப்பு லட்சுமி, தமிழச்சி தங்கபாண்டியன், வ.வேலு சாமி, பெ.குழந்தைவேலு மற்றும் கழகத்தினர் அஞ்சலி செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்கள்.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் சிறுகதை மன்னன் என பாராட்டு பெற்றவரும், கழகப் பணியில் பெரும் தொண்டாற்றியவருமான எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் துணைவியார் ஜாக்லின் தென்னரசு உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார்.

மதுரையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தும் வகையில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி, பின் அவரது மகள்கள் தமயந்தி அருணாசலம், யாமினி சோமசுந்தரம் மற்றும் குடும்பத்தாருக்கு அமைச்சர் பெருமக்கள் தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரிய கருப்பன், பி.மூர்த்தி, முன்னாள் கழக துணைப் பொதுச் செயலாளர் சுப்பு லட்சுமி ஜெகதீசன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., முன்னால் ஐஜி சந்திரசேகரன், மாவட்ட செயலாளர் முத்துராமலிங்கம் காதர் பாஷா எம்.எல்.ஏ., வ.வேலுசாமி, பெ.குழந்தை வேலு, இளவரசி, நாமகோடி நாராயணன் உள்ளிட்டோர் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.


மேலும் பூமிநாதன் எம்.எல்.ஏ, கழக நிர்வாகிகள் அக்ரி கணேசன், மாவட்டத் துணைச் செயலாளர் சேங்கைமாறன், எஸ் எஸ். டி.வல்லபாய், ரவீந்திரன், புண்ணியமூர்த்தி, அறிவு நிதி, ராஜேஷ் கண்ணா, கருப்பு, முத்து, மகேந்திரன், எஸ்.எஸ்.அருணாச்சலம், ருக்மணி காதர் பாஷா வெள்ளைச்சாமி, மகாத்மா பள்ளி தாளாளர் பி.பன்னீர்செல்வம்,

கண்ணதாசன், திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் மணி செல்வம், ஜெய ஆனந்தன், ஏ. ஆர்.சி. மனோகரன்,

அமைச்சர் தங்கம் தென்னரசு உதவியாளர் பாலகுரு, சொக்கலிங்கம், சிந்து, வக்கீல் வினோத், டாக்டர்.சிவரஞ்சனி,சீனி முருகன், கார்த்தி, நடராஜன் மற்றும் மதுரை மாவட்ட கழக நிர்வாகிகள், சிவகங்கை மாவட்ட கழக நிர்வாகிகள் திரளான கழகத்தினர், பொதுமக்கள் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் சே.பிரேம் ஆனந்த் அலுவலகத்தை மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்துகொண்டு புதிய அலுவலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, கே.ஜெ.ரமேஷ், பிரபுகஜேந்திரன், ம.ராஜ், பா.நரேஷ்குமார், காயத்திரி ஸ்ரீதர், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல் வர்ஷன், ஜெ.மகாதேவன், சன்.பிரகாஷ், பொன்.விஜயன், எம்.பர்க்கத்துல்லாகான், கே.சுரேஷ்குமார், துர்காபிரசாத், ஞா.ராஜா, மகேஸ்வரி, பால விநாயகம், குட்டி(எ)பக்தவச்சலம், ஆர்.திலீப்ராஜ், பி.அன்பு அல்பர்ட், வ.ஹரி, மோதிஸ், உதயகுமார், எட்வின், ராஜேஷ், சரவணன், சிகாமணி, கஜலட்சுமி, தாமஸ்(எ)நாராயணசுவாமி, கருணாகரன், செந்தில், கே.வி.என்.ஆனந்த், தியாகராஜன், ராஜ், பாலாஜி, சுரேஷ்குமார், வினோத், கார்த்திக், பார்த்திபன், ஆதவன் , ஜீவா, பாஸ்கரன், தாஸ், ஐ.சி.எப்.ரவி, ஸ்ரீதர், கார்வண்ணன் ஜெயச்சந்திரன், தாமரைச்செல்வன், ரோமரியே, பிரசன்னாகுமார், ஆறுமுகம், மணிகண்டன் ,கண்ணன் திருநாவுக்கரசு, சதீஷ்குமார், முருகன், சௌந்தர் , செல்வி , ஸ்டெல்லா , ஜெயபால், அன்பு, தினேஷ், ராஜசேகர், அருணகிரி, சூரி, திருமலை, நாகேந்திரன், தங்கதுரை, கனிஷ்கர், சம்பத் , கண்ணன், ஜனார்த்தனன், இளவழகன் , குமார், சங்கர், உள்பட பலர் உள்ளனர்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர், பிரசிடென்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடந்த எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 16 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 1,966 மாணவ–மாணவியருக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சியின் மண்டலம் 5–இன் தலைவர் ஸ்ரீராமுலு, 61–ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி பாத்திமா முசாஃபர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மணிமுடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழகம் அறிவிப்பு

மதுரை மாநகர் மாவட்டத்தைச் சேர்ந்த மிசா எம்.பாண்டியன் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 18.09.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.




பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு74க்குட்பட்ட பகுதிக்கான ஏரியா சபை கூட்டம் இப்பகுதியின் மாமன்ற உறுப்பினரும், மேயருமான திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (18.09.2024) 74ஆவது வார்டு அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மண்டல அலுவலர் முருகன், வார்டு குழுச் செயலாளர் மற்றும் உதவிப் பொறியாளர் திருமதி சரஸ்வதி, உதவி செயற்பொறியாளர் மாதவசங்கர், ஏரியா சபை செயலாளர் மற்றும் சுகாதார அலுவலர் பால்ராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம், மின்துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், காவல்துறை உள்ளிட்ட துறையின் அலுவலர்கள், ஏரியா சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.